தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி- 2 | தி.பி. 2015 மீனம்-12 (25-3-84) 65 காசு இதழ் எண்: 35 | பகுதி-12-14

அரசியலில் நல்லமரபுகள் உருவாக்கப்பெற வேண்டும்!

ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சிகளும் நல்ல மரபை உருவாக்கவில்லை!

தமிழின முன்னேற்றத்திற்கு இது பெருந்தடையாக இருக்கிறது!

தமிழக அரசியலையும் வடநாட்டு அரசியலாக்கப் பார்க்கின்றன, எதிர்க்கட்சிகள்!

கொள்கைகளில் விடாப்பிடிவேண்டும்! முரட்டுத்தனம் கூடாது!

முரட்டுத்தனம் அரம்பத்தனத்தையே (ரௌடிசத்தையே) வளர்க்கும்!

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் போக்குக் குறித்துப் பாவலரேறு கவலை!

சென்னை. 20 :

தமிழ் நாட்டில் வளர்ந்து வரும் அரசியல் கட்சிகளின் போக்குக் குறித்துப் பாவலரேறு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். அவர் கீழ்வரும் அறிக்கையை அது தொடர்பாக வெளியிட்டுள்ளார். அவர் அறிக்கை வருமாறு :

தமிழ் நாட்டின் இன்றைய அரசியல் நிலைமை மிகவும் கவலை தருவதாக உள்ளது. தமிழ் நாட்டிலும் சரி, பிற மாநிலங்களிலும சரி, ஆளுங் கட்சிகளும் எதிர்க் கட்சிகளும் எதற்கெடுத்தாலும் முரட்டுத் தனமான போக்குகளையே அரசியல் என்னும் பெயரால் வளர்த்து வருகின்றன. குடியரசுக்குகந்த நல்ல மரபுகளை அவை கடைப்பிடிப்பதாய்க் காணோம். அரசியலில் அரம்பத்தனம் (ரௌடிசம்) வளர்ந்து வருகிறது. இந்நிலை எங்குப் போய் முடியுமோ, தெரியவில்லை.

ஆளுங்கட்சிகள் எதிர்க் கட்சிகளை அடக்கி ஒடுக்குவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சிகளும், ஆளுங்கட்சிகளை ஆள விடாமல் செய்வதையே கொள்கையாகக் கொண்டிருக்கின்றன. இந்தப் போக்கு மகிழ்ச்சி தருவதாயில்லை. மாறாகத் துன்பத்தையும் அச்சத்தையுமே மக்கள் உள்ளங்களில் ஏற்படுத்துவதாய் உள்ளது. எதிர்க்கட்சிகள் கூறும் எந்தக் கருத்தையும் ஆளுங்கட்சி வரவேற்பதாய் இல்லை. அக்கருத்தை முறியடிப்பதாகவே உள்ளது. அந்த வகையிலேயே தம் பெரும்பான்மை வலிவைப் பயன்படுத்துகிறது.

எதிர்க்கட்சிகளும் ஆளுங் கட்சிக்கு நல்ல, ஆக்கமுழுமையான, நாட்டுக்கு நலந்தருவதான கருத்துகளை எடுத்துச் சொல்லாமல், எதற்கெடுத்தாலும் போராட்டம், வேலை நிறுத்தம், பொதுக்கடையடைப்பு, சட்டமன்றத்தை விட்டு வெளியேறுதல், சட்டமன்றத்தைப் போர்க்களமாகவும், பொதுமேடையாகவும் பயன்படுத்தல் முதலிய கொடுமையான போக்குகளையே தம்முடைய நடைமுறைகளாகக் கொண்டிருக்கின்றன. கருத்துகளை எடுத்து, ஆளுங்கட்சியின் முன் வைப்பதில் முரட்டுத்தனமான செயல்களையே அவை கடைப்பிடிக்கின்றன.

தமிழ்நாட்டு அரசியல் கிட்டத்தட்ட வடநாட்டு அரசியலையே பின்பற்றுவதாக உள்ளது. அரசியலில் நல்ல மரபுகள் உருவாகுவதற்கு ஆளுங்கட்சிகளும், எதிர்க் கட்சிகளும் இணைந்து முயற்சி செய்ய வேண்டும். தமிழ்நாட்டு அரசியலில் நல்ல மரபு உருவாகவில்லையானால், தமிழ் மொழி வளர்ச்சியும், தமிழின முன்னேற்றமும் தடைப்பட்டுப் போகும். தமிழர்கள் வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் கொடுமைப் படுத்தப் படுவதற்கு இதுவும் ஒரு காரணம். இங்குள்ள அரசியல் கட்சிகள் வெளியே வாழும் தமிழர்களின் சிக்கல்களில் ஒரு பொதுக் கருத்தைப் பின்பற்ற வேண்டும். அக்கருத்து, அவர்களின் எந்தச் சூழ்நிலைக்கும் உடனே துணைபோவதாக இருக்க வேண்டும். அல்லாக்கால், வெளியே வாழும் தமிழினத்தைக் காக்க முடியாது. அவர்களின் சிக்கல்கள் தீர்க்கப் படாதவரையில், தமிழ்நாட்டுத் தமிழர்களும் அமைதியாக வாழ முடியாது.

குடியரசு அமைப்பு முறைப்படி, தேர்தலில் வெற்றி பெறும் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சி ஆட்சியமைக்கிறது. அதை ஓர் ஆட்சிக் காலமான ஐந்தாண்டுகளுக்கும் அமைதியாக ஆள விட வேண்டும். இவ்வாறின்றி, அதைப் பாதியிலேயே ஆட்சியிலிருந்து கீழிறக்கப் பாடுபடுவது, நல்ல அரசியல் மரபுக்கு உதவுவதாகாது.

இப்பொழுதுள்ள எதிர்க் கட்சிகள், ஏதோ ஒரு காரணத்துக்காக, உடனே ஆளுங் கட்சியைக் கீழிறக்குவதையே தம் நோக்கமாகக் கொண்டு செயல் படுகின்றன. இது நயன்மையாகாது. பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப் பெறும், ஓர் ஆளுங்கட்சியைத் தங்கள் விருப்பப்படி கீழிறங்க வேண்டும் என்பது மிகவும் தவறான கோரிக்கையாகும். தம் கட்சிகளில் ஒன்று, ஒரு சூழ்நிலையில் ஆட்சியமைக்கும் பொழுதும், இத்தகைய கோரிக்கையும் முன்வைக்கப்படும் என்பதை அவை சிந்திக்கத் தவறி விடுகின்றன. இந்த நிலையில் எந்த ஒரு கட்சியும் அமைதியாக ஆட்சியை அமைத்து விட முடியாது; மக்கள் நலன்களைப் பற்றிச் சிந்திக்க இயலாது; நாட்டின் ஆக்க முழுமையான செயல்களில் கருத்துச் செலுத்தவும் முடியாது எனவே, ஆளுங் கட்சியை ஓர் ஆட்சிக் காலத்திற்குள், கீழிறங்கச் செய்ய

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

தொடர் : 7

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பிய சுற்றுச் செலவு

அன்று (13-9-83) இயல்பான வேட்டி சட்டையுடன் முழங்காலுக்கும் கீழாக வரும் ஒரு நீல நிறக் குப்பாயத்தை அணிந்து கொண்டவனாய் வளங்கோவுடன் வீட்டிற்கு வெளியே வந்தேன். வெளியே குளிர். சிறு உமிசதூறல் விழுந்து கொண்டிருந்தது. ஊமை வெயிலும் சிறிது அடித்துக்கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலை எனக்கு மிகவும் புதியது என்றாலும் மிகவும் விருப்பமாயிருந்தது.

வளங்கோ குடியிருக்கும் செர்சி போநதெயிசு பகுதி நல்ல அழகிய குடியிருப்பு. ஒரு வீட்டில்கூட பலகணிகள் திறந்திருக்கவில்லை. அனைத்தும் கண்ணாடிப் பலகணிகள். அவற்றுக்குப் பின்புறம் அழகழகான வெள்ளைத் திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. வீடுகள் மேலே, சாய்ந்த மரக் கூரைகளிருந்தாலும், மிக உயரமாகவும் சதுரஞ் சதுரமாகவும் இரண்டு அல்லது மூன்றடுக்குகளைக் கொண்டனவாகவும் இருந்தன. வீடுகளுக்கு முககாற் பகுதிகளுக்கு மரங்களையே பயன்படுத்தி இருந்தனர். நேர்நேரான வரிசைகள். வீடுகளைச் சுற்றிலும் தரையில் மூன்றடி அளவில் எல்லைகளை வைத்துப் பூஞ்செடிகள் ஓரங்களை அழகு செய்தன. ஒவ்வொரு கீழ் அடுக்கு வீட்டின பின புறமும் அழகிய பன்னிறப் பூக்களை உடைய தோட்டங்கள் கண்களுக்கும் வீட்டிற்கும் அழகை கொடுத்துக் கொண்டிருந்தன.

பாவலரேறு அவர்களுடன், பிரான்சுக்கிளை உ.த.மு.க. அமைப்பாளர்கள்
வலப்புறம்: அமைப்பாளர் திரு. அரிமா வளங்கோ. இடப்புறம்: திரு. சொல்லின் செல்வர் செயலாளர்.

இருவரும் மெல்ல நடந்து மிக அருகில் இருந்த நகருந்து நிற்குமிடத்திற்கு வந்தோம். நகருந்து நிற்கும் ஒவ்வோரிடத்திலும் ஒரு சிறிய கல்நார் கூரை வேய்ந்த நிழல் குடையும் இரண்டு விசிப்பலகைகளும் மரத்திலோ, கற்காரையிலோ போட்டிருக்கிறார்கள். நம நாட்டில் பல இடங்களில் வண்டிகள் நிற்கும் என்பதற்கான அடையாளக் கம்பங்கள் கூட இருப்பதில்லை. ஆனால் அங்குள்ள நகருந்து வண்டி நிறுத்தங்கள் அனைத்தும் அழகு வாய்ந்தவை. ஒவ்வொன்றும் காரைத் தளம் போடப்பட்டது. பலகைச் சுவர்கள் உள்ளன. அவற்றில் பாரிசு நகரத் தரைப்படம் பெரிதாகக் கண்ணாடிச் சட்டமிடடுத் தொங்கவைத்திருக்கிறார்கள். அப்படங்கள் அந்நகரிலுள்ள அனைத்து உந்து நிறுத்தங்களையும் எண்களுடன் காட்டுகின்றன. ஒருபுறத்தில் நிற்குமிடத்திற்கு வரும் வண்டிகள், அவற்றின எண்கள், அவை வந்து சேரும் நேரம், புறப்பட்டுச் செல்லும் நேரம, (நிற்கும் இடைவெளி நேரம் ஒரு நிமையமானாலும் அதைக குறித்திருக்கிறார்கள்.) அவ் வண்டிகள் எந்தெந்தப் பகுதிகள் வழியாகச் சென்று இறுதியில் எங்கு போய்ச்சேரும் என்பதையெல்லாம் விளக்கமாக அட்டவணையிட்டுக காட்டியிருக்கின்றார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு வியப்பான செய்தியை வளங்கோ சொன்னார் அவ்விடத்திற்கு வண்டி 8-11க்கு வரும் என்று அட்டவணையில் குறித்திருந்தால், கொஞ்சங்கூட முன்னே பின்னே வராதாம். சரியாக அதே நேரத்துக்கு வருமாம். நேரம் காலம் என்பதைப்பற்றியே கருத்துக் கொள்ளாத நாட்டிலிருந்தும் மக்களிடையிலிருந்தும் நான் சென்றிருந்ததால் முதல் முறை எனக்குச் சிறிதும் நம்பிக்கை வரவில்லை. ஆனால், அவர் சொன்னபடியே அந்தக் குறிப்பிட்ட வண்டியும் வந்தது. அதன் வழியாக அருகில் இருந்த மின்தொடர் வண்டி நிலையம் செல்ல ஏறினோம். ஆ! என்ன வியப்பு! உந்து வண்டியா அது! அதன் புற, உள் அமைப்புகளும், இருக்கைகளும், தூய்மையும் பளபளப்பும் அடடடா! எத்துணை அழகு! எத்துணை அழகு! பழைய வண்டிகளுக்கும் புது வண்டிகளுக்கும் சிறிதும் வேறுபாடே இல்லை, அத்துணைப் பராமரிப்பு! சிறு அளவு மெருகு குறைந்தாலும், பழுதுபட்டாலும் உடனே பொலிவேற்றுதலும், ஒக்கிடுதலும் செய்யப்படுகின்றனவாம்! எப்படிப்பட்ட துறை மேலாண்மை! நம் நாட்டில் கனவுகூட காணமுடியாது. வண்டியின் உட்பகுதி வானூர்தி போல உள்ளது. மெத்திருக்கைகளும் அப்படியே! வண்டிக்குள் ஏறிய வுடன் 'கம்'மென்று இனிய 'ஓடிகொலோன்' மணம்! ஒரு சிறு அழுக்கோ கிழிசலோ வண்டியுள் எங்கும் இல்லை! (நான் ஒரு சிறிதும் மிகைப்படுத்தியே கூறவில்லை. நகர கண்டதை அப்படியே எழுதுகிறேன்; எழுதுவேன்.) நகர உந்துகளே இப்படி என்றால தொலை செல்லும வண்டிகளின் அழகையும் அமைப்பையும் சொல்லவே வேண்டியதில்லை!

வண்டிக்குள் எப்பொழுதுமே கூட்டம் இல்லை. சில பொழுதுகளில் மட்டும் ஐந்து பத்துப்பேர் நின்று கொண்டு போகுமளவுக்குக் கூட்டம் இருக்கும். மற்றபடி அனைவரும் தாராளமாக அமர்ந்து போகலாம். நின்று கொண்டு போகும் அரிதான நிலையில்கூட இடித்துக்கொண்டு போவதில்லை. எங்கு பார்த்தாலும்எவரைப்பார்த்தாலும் தூய்மை! தூய்மை! தூய்மை!

வண்டி வந்து நின்றவுடன் கதவுகள் தாமே திறந்து கொள்கின்றன. ஏறுமிடம் ஓட்டுநர் வழியாக உள்ளது. ஓட்டுநர்கள் உயர்ந்த உடைகளில் உள்ளனர். சீருடை இல்லை. அவரவர் விருப்பமாக அதிகாரிகளைப் போல் உடுக்கின்றனர். (சீரில்லாத இடத்தில்தானே சீருடை தேவையாக இருக்க முடியும்.) ஓட்டுநர் முன்னே சீட்டு வழங்கும் சிறு பொறி உள்ளது. பெருமபாலும இரு அளவுச் சீட்டுகளே உள்ளன. குறுகிய தொலைவுக்கு ஒன்று! நீண்ட தொலைவுக்கு ஒன்று! காசைப் போட்டவுடன் சீட்டு வருகிறது. எடுத்துக் கொண்டு போய் இருக்கையில் அமர்ந்து கொள்ளலாம். ஓட்டுநர் பார்த்துக் கொண்டிருப்பார். சில நேரங்களில் வேறு கவனமாக இருந்தாலும் அனைவரும் முறையாக நடந்து கொள்கின்றனர். வண்டி புறப்பட்டவுடன் ஓட்டுநர் பொருத்தானை அழுத்துகிறார். கதவுகள் மூடிக்கொள்கின்றன. கதவுகள் மூடிக்கொண்டால் படிகளும் இல்லை. அவற்றின் மேல் நிற்பவர்களும் தொங்குபவர்களும் இல்லை! அனைவரும் பள்ளிக் கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்பட்டவர்கள் போல், ஒழுங்காக நடந்து கொள்கின்றனர். நாகரிகம், பண்பாடு என்பவற்றை அங்குதான் நன்றாக விளங்கிக் கொண்டேன். நாம் இங்கு அவற்றை ஏட்டில் படிப்பதோடு சரி. (இந்த விடத்தில் அனைவரும் முணுமுணுப்பது என் காதில்விழுகிறது. அவர்கள் எதையெண்ணி முணுமுணுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் அதைப் பற்றியும் பிறகு சொல்வேன்.)

உந்து வண்டிகளிலாகட்டும், மின் வண்டிகளிலாகட்டும் ஏறி அமர்ந்துவிட்டால், அனைவரும் சல சல என்று பேசிப் பக்கத்தில் உள்ளவர்களுக்குத் தொந்தரவும் எரிச்சலும் உண்டாக்காமல் மிகவும அமைதியாக இருந்து பயணம் செய்கிறார்கள். இவ்வுயர்ந்த பழக்கம் ஒன்றை நாம் கடைப் பிடித்தாலும் போதும், எவ்வளவோ நாகரிகமாக இருக்கும். பல நேரங்களில் நானும் வளங்கோவுந்தாம் சிறு ஒலியுடன் பேசிக்கொண்டு சென்றோம். அப்பொழுது வண்டியிலுள்ள அனைவரும் எங்களையே கவனித்துப்பார்த்துக் கொண்டிருந்ததை நான் கவனித்திருக்கிறேன்.

உந்து, தொடர்வண்டி நிலைய நிறுத்தத்திற்கு வந்து சேர்ந்தவுடன், அனைவரும் அடித்துப் பிடித்துக் கொண்டு இறங்காமல் மிக ஒழுங்காக இறங்கினர். நாங்களும் மின் தொடர் வண்டி நிலையத்தின் தரைத்தளத்திற்கு வந்தோம். உள்ளே நுழைந்தவுடன் மிகவும் வியந்துபோனேன். எங்கும் தூய்மை. வழுவழுப்பான சுவர்கள், தரைகள். சீட்டுக் கொடுப்பது, ஆய்வது, மின்கதவுகள் வழியாகச் சீட்டை ஒரு தொளையிலிட்டுவிட்டுக் கதவைத் தாண்டி உள்ளே போனால், வேறு தொளைவழியாக அச்சீட்டு ஆய்வு செய்யப் பெற்று வருவது அனைத்தும் பொறிகளால்தாம் நடைபெறுகின்றன. ஆள்களுக்கே அங்கு வேலையில்லை. எல்லாம் எங்கும் பொறிகள்தாம்! அறிவியல் வளர்ச்சியை முழுவதும் வாழ்வியலுக்கே பயன்படுத்திக் கொள்கிறார்கள். தரைத்தளத்திலிருந்து மின்வண்டி ஓடும் தரைக்கீழ் நிலையத்திற்குச் சுழலும் படிக்கட்டுகளை அமைத்திருக்கிறார்கள். இந்தியாவில் இப் படிக்கட்டுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வகைப் படிக் கட்டுகளைச் சிங்கப்பூரிலேயே சில இடங்களில் பார்த்திருக்கின்றேன். இங்கே இவை பெரும் அளவில் உள்ளன.

மின்தொடர் வண்டிகளை அங்கு மெட்ரோ (Metro) என்று அழைக்கின்றனர். பாரிசு நகரத்தையும் அதன் சுற்றுப் புறங்களையும் இணைக்கும் அனைத்து மெட்ரோ வழிகளும் வண்டிகளும் நிலத்துக் கடியில்தாம் செல்கின்றன. நிலத்தின் மேலாக ஒரு தடம் கூட இல்லை. இதே ஒரு பெரிய அருஞ் செயலாக எனக்குப்பட்டது. இதுபோல் ஒரு நிலை நம் நாட்டு நகரங்களில் எங்கும் இல்லை. அப்படி என்றேனும் வரும் என்றும் சொல்லமுடியவில்லை. ஏனெனில் நாம் இன்னும் வாழ்வின் அன்றாடத் தேவைகளையே நிறைவு செய்யவில்லையே!

தரைக்குக் கீழ் இரண்டு மூன்று சுரங்க அடுக்குகளை அமைத்திருக்கின்றனர். ஒவ்வோர் அடுக்கிலும் ஒவ்வொரு தொடர்வண்டித்தடம் உள்ளது. ஒவ்வொன்றும வேறு வேறு திசைகளுக்குச் செல்லுபவை. மூன்று சுரங்க அடுக்குகளும்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

வறுமைக்கோடு---- ஒரு சிந்தனை!

1981-ஆம் ஆண்டில் நடுவணரசுத் திட்டக் குழு ஓர் அறிக்கை வெளியிட்டது. அவ்வறிக்கையின்படி,

ஆண்டுக்கு 376 உருபா (அஃதாவது மாதம் ஒன்றிற்கு (31-33 உருபா) வருமானமுள்ளவர்களாகச் சிற்றூர் (கிராம)ப் புறங்களிலும்,

ஆண்டுக்கு 388 உருபா (அஃதாவது மாதம் ஒன்றிற்கு உரு 32.33) வருமானமுள்ளவர்களாக நகர்ப் புறங்களிலும், கோடிக்கணக்காக

— வாழ்ந்து கொண்டுள்ளனர். அவர்களெல்லாம் வறுமைக் கோட்டில் உள்ளதாக அரசு கணித்துள்ளது.

எனவே 'வறுமைக்கோடு என்பது நகர்ப்புறத்தில் மாதம 32.33 உருபா ஆகவும் அஃதாவது நாள் ஒன்றுக்கு உரு 1.08 ஆகவும் வருமானம் உடையவர்களும்,

சிற்றூர்ப் புறத்தில் மாதம் 31 33 உருபாவும், அஃதாவது நாள் ஒன்றுக்கு உரு 1.04 ஆகவும் வருமானம் உடையவர்களும், வறுமைக் கோட்டிலும், அதற்குக் கீழும் உள்ளவர்களாம்.

அஃதாவது நம் கேடு கெட்ட இந்திய அரசின் கணக்கு(!)ப்படி!

இப்படி இருப்பவர்களே மொத்த மக்கள் தொகையில் 48% பேர். அஃதாவது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையாகிய 68 கோடியே 33 இலக்கம் (ஏறத்தாழ 70 கோடிப்) பேர்களில், இவர்கள் கணக்குப்படி(!) வறுமைக் கோட்டிலும் அதற்குக் கீழும் உள்ளவர்கள் 32 கோடியே 80 இலக்கம் பேர்!

அஃதாவது நாள் ஒன்றுக்கு ஓர் உருபா வருமானம் உள்ளவர்களும், அவர்களுக்குக்கீழும் உள்ளவர்களுந்தாம அஃதாவது வறுமையாளர்-ஏழைகளாம்!

அவர்கள் தொகை ஏறத்தாழ 33 கோடிப்பேர். இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதிப்பேர்!

மற்ற அத்தனைப் பேரும் பணக்காரர்களாம்!

அஃதாவது நாள் ஒன்றுக்கு ஓர் உருபாவுக்கு மேல் $1\frac{1}{2}$ உருபா 2 உருபா 3 உருபா வருமானமுள்ளவர்களெல்லாம் கூட பணக்காரர்களாம்! அவர்கள் நாட்டில் பாதிப்பேராம்!

இந்தியாவின் மக்கள் தொகையில் பாதிப்பேர்களின் மொத்த ஆண்டு வருமானமே 194 உருபாதான். அஃதாவது மாதம் ஒன்றுக்கு 16 உருபா நாள் ஒன்றுக்கு 53 காசுதான்.

எப்படியிருக்கிறது கணக்கு. இஃது எந்த முட்டாள் திருடன் போட்ட கணக்கு என்று தெரியவில்லை!

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

உன்னுடன் பிறந்தவன் உனையெதிர்க் கின்றான்!

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 35 (25-3-84) பகுதி 12-14

அகத்திலும் புறத்திலும் அடி(ழி)படும் தமிழினம் !

உலகில் நசுக்கப்பட்டு வரும் மக்களினங்களில் தமிழினமும் ஒன்றாகி நிற்கிறது. இவ்வரிசையில் உள்ள பிற இனங்களுக்கும், தமிழினத்திற்கும் ஒருவேறுபாடு, மற்றவை சிறிய இனங்கள்; வரலாற்றின் பிற்பகுதியில் தோன்றியவை; ஆனால் தமிழினமோ பழம்பெருமை வாய்ந்த ஒரு வரலாற்றுப் பேரினம். இந்த இனம் உலகின் பல பகுதிகளில் உள்ள பல நாடுகளிலும் பரவி, ஏறத்தாழ 14.50 கோடி மக்களை உள்ளடக்கியது. (7.50 கோடி என்பதாக நம் தலைவர்கள் ஒரு கணக்குச் சொல்லிக் கொண்டிருப்பது பெருந்தவறு.) இவ்வளவு பெரிய இனம், தான் சென்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஏறத்தாழ 40 நாடுகளில், இரண்டே இரண்டு நாடுகளில்தான் முழுத் தன்னாட்சி உரிமைக்கு உகந்ததாக இருக்கிறது. அந்த இரண்டு நாடுகளும் தமிழினத்தின் தாயகங்களாக உள்ள தமிழ்நாடும், தமிழீழமும்.

தமிழீழத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்டு வருகின்றன என்பதை உலகம் அறியும். அடுத்து, அவர்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடி வருவதும், அதனால் பல அழிவுகளுக்குள்ளாகிக் கொண்டிருப்பதும் வெளிப்படையாக நிகழ்ந்து வருகின்றன. எனவே, அவர்களின் போராட்டத்திற்குத் துணையாக, தமிழ்நாடும், உலகத் தமிழினமும் வெகுண்டெழுந்து உள்ளன.

இந்நிலையில். தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டுக்கு அண்டையிலுள்ள மாநிலங்களிலும், இத் தமிழினம் இப்போது அடிபடவும் அழிபடவும் தொடங்கியுள்ளது, பெரிதும் வருந்துதற்கும் கவனஞ் செலுத்துதற்கும் உரியதாக உள்ளது. அண்டையில் கருநாடகத்தில், தமிழர்களுக்கு நிகழ்ந்து வரும் கொடுமைகள், இத் தமிழினத்தின் முன்னேற்றத்தில் நாட்டங்கொண்டுள்ள அனைவருக்கும் ஒரு வெல்விளியாக (சவாலாக) அமைந்திருக்கின்றன.

கருநாடகத்தில் உள்ள தமிழர்கள், பிற வெளிநாட்டுத் தமிழர்களைப் போலவே, அம் மாநிலத்தின் உருவாக்கத்திலும் பொருளியல் மேம்பாட்டிலும் பெரும்பங்கு கொண்டுள்ளது மறுக்கமுடியாதது. அம் மாநிலத்தில் பரவலாக வாழ்ந்து வரும் சிறுபான்மையினங்களில், தமிழினம் முதலிடத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. மொழிவாரி மாநிலப் பிரிவுக்கு முன்பிருந்தே, கருநாடகத்தைத் தாய்நிலமாகக் கொண்ட தமிழர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள். அவர்கள் இதுவரை அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்து விட்டு, இக்கால் கன்னடியர்களாகிய பெரும்பான்மையினத்தவரால் தாக்கப்படுவதும் உயிரிழப்பதுமாக உள்ளார்கள் என்பது, மிகவும் கொடுமையானதும், உடனே தலையிட்டு ஆவன செய்யப்படவேண்டியதுமான ஒரு சிக்கல்.

கருநாடகத்தில் உள்ள தமிழர்களுக்கு இதுவரை இருந்து வந்த வாழ்வுரிமைகள் படிப்படியாக மறுக்கப்பட்டு வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது அங்குள்ள தமிழர்கள் தங்கள் தாய் மொழியாகிய தமிழ் மொழியைக் கற்கவும் தடையேற்பட்டுள்ளது: அங்கு இதுவரை செயல்பட்டுவந்த தமிழ்ப் பள்ளிகள் மூடப்படுகின்றன;சிறப்புக் கல்வியில் தமிழர்கள் சேர்க்கப்படுவது குறைக்கப்படுகிறது. நீண்டகாலமாகத் தமிழர்கள் வாழ்ந்து வரும் பகுதிகளில் கன்னடியர்களின் ஊடுருவல் ஏற்பட்டு அவர்களின் குடியமைப்புகள் விரிவாகி வருகின்றன; தமிழர்களுக்கு முறையாகக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் தவிர்க்கப்படுகின்றன; தமிழர்கள் தங்கள் தாய் மொழியுடன், கன்னடமும் ஆங்கிலமும் சிலர் இந்தியும் கற்றிருந்தாலும், அவர்கள் புதிதாக, வேலைதேடித்தரும் அலுவலகங்களில் பதியப் படுவதில்லை. தமிழர்கள் அங்குக் குடிசைப் புறங்களிலேயே வாழக் கட்டாயப் படுத்தப்படுகின்றனர். அங்கு பொது வாழ்க்கைக்குரிய வசதிகள் எதுவும் செய்யப்படுவதில்லை. எனவே அவர்கள் நாய்கள், பூனைகள் போலும், மாடுகள் எருமைகள் போலும் குப்பை மேடுகளிலும், சகதிகளிலும், சாய்க்கடை ஓரங்களிலுமே வாழ வேண்டியுள்ளது. இனி, இவற்றுக்கும் மேலாக அவர்கள் நாள்தோறும் தாக்கப்படுவதும், கொலைப்படுவதும் அதிகமாகி வருகின்றன.

பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளரும்,
நீண்டநாளைய தென்மொழி அன்பரும்,புரவலரும்,
ஈரோடு, கவின் மருத்துவமனை உரிமையாளரும்,
சிறந்த கொள்கை மறவரும் ஆகிய

மருத்துவ மேதை. பர். இளங்கோ அந்தோ! மறைந்தார் !

இயக்கத்திற்கும் ஈடுசெய்யவியலாத பேரிழப்பு!
சொல்லிலும் செயலிலும் தனித்தமிழ் பேணிய
கொள்கைக் கோவை இனி எங்குக் காண்போம்?

தென்மொழியின் தொடக்கக் காலம் முதல் நேற்று வரை—அவரின் கல்லூரி நாள்கள் முதல், நோயாளிகளோடும் ஒய்விலா மருத்துவப் பணிகளோடும், அலைந்து திரிந்த நாள்கள்வரை, தனித்தமிழின் மேலும் நம் மேலும் தணியாத அன்பும் ஆதரவும் கொண்ட செம்மல், குணநலக் குன்று கொள்கைக்கோ, ஈரோடு மருத்துவர் பர். இளங்கோ அவர்கள் கடந்த 14-3-84 அன்று திடுமென மறைந்தது அறிந்து ஆற்றொணாப் பெருந்துயர் அடைந்தோம்.

இளங்கோஅவர்களின் மருத்துவத் திறம் ஒப்புயர்வற்றது; அவரின் உழைப்போ அதனினும் உயர்ந்தது! அவரின் பண்பொடு கலந்த அன்போ அவ்வுழைப்பினும் திறத்தினும் பெருமை கொண்டது!

ஆங்கில மருத்துவத்தில் மிக உயர்கல்வி கற்றும், தூய தமிழ்மேல் கொண்ட அவரின் ஆர்வம் சிறிதும் குறையவில்லை! மாறாக மலையென வளர்ந்தது! மருத்துவமனை முழுவதும் தூயதமிழ் மணந்தது!

எப்பொழுதும் உழைப்பு! உழைப்பு! உழைப்பு! இருப்பினும் அவர் முகத்திலும் இதழிலும் கனிவும் புன்சிரிப்பும் தழைத்து மலர்ந்திருக்கும்!

ஈரோடு கவின் மருத்துவமனை அவருடைய தூயதமிழ்ப் பற்றின் தாகமகால்! அங்குள்ள ஒவ்வோர் அறையும் அவருடைய கொள்கைக்குச் சான்று!

தென்மொழி மேல் அற்றைக் கல்லூரி நாள் முதல் ஆராக் காதலுடையவர்!

தம் ஓயாத உழைப்பிற்கிடையிலும், நம் உ.த.மு.க. இயக்கத்திற்கு உறுதுணையாக இருந்தார். அவரிருந்த மாவட்ட அமைப்பாளர் பணி, அவரால் பெருமை பெற்றது!

அவரை இழந்ததில் நமக்கும் நம் இயக்கத்திற்கும் பேரிழப்பு!

'உங்கள் உடலை என்னிடம் தவிர வேறு எவரிடமும் காட்டவேண்டாம் ஐயா! தேவையானால் ஓர் அட்டை இடுங்கள்; ஓடோடி வந்து பார்க்கிறேன்!—என்று கூறிய அன்புள்ளமே! அருள் நெஞ்சமே!

ஈரோடு வந்தால் எங்குக் காண்போம் உம்மை?
இனி எவரிடம் காட்டுவோம் எம்மை!

சாக்காட்டின் வேக்காட்டில் வெந்து தணியும் குடும்பத்திற்கும் அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் எம் கண்ணீர் இரங்கல்கள்!

சென்னை-5
19-3-84

அன்புள்ள
பெருஞ்சித்திரன்

என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்

அன்பிற்கும் வணக்கத்திற்குரிய ஐயா அவர்கட்கு,

வணக்கம்: தமிழுக்கும், தமிழினத்திற்கும் தாங்கள் செய்து வரும் அளவிடற்கரிய தொண்டையெண்ணி உளம் உவக்கின்றேன். பொருளுக்கும், புகழுக்கும் போட்டியிட்டுக் கொண்டு இருக்கின்ற நம் இனத் தலைவர்களிடையே தமிழினத்திற்காக எவ்வகை எதிர்ப்பார்ப்பும் இன்றித் தாங்கள் செய்துவரும் பணி சிறப்புற எங்களைப் போன்ற தனித்தமிழ் ஆர்வமுடையவர்கள் தங்கள் கீழ் இருந்து தொண்டாற்றுவதைச் சிறந்த பேறாக எண்ணுகின்றனர். ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. கூட்டத்தில் தங்கள் உரையைக் கேட்டு நல் உணர்வு கொண்டேன். தனியொருவனாக இருந்தும் எம்மால் முடிந்த இன நலத்தொண்டைச் செய்வேன் என்று உறுதி பூணுகிறேன். ஈரோட்டில் நடந்த உ.த.மு.க கூட்டத்தில் மேட்டூரிலிருந்து-தமிழியக்கம் அமைப்பிலிருந்து-வந்து பேசியவன் நான். சேலத்தில் பணியாற்றுகிறேன்; என்னையும் உலகத்தமிழின முன்னேற்ற கழகத்தின் உறுப்பினனாக ஏற்று கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

தங்களின் அன்பு மாணவன்
— சு. கணேசன், மேட்டூர் அணை.

இந்தக் கொடுமைகளையெல்லாம். தில்லியரசு பார்த்தும் பாராததுமாக இருந்துவருவது, அவற்றைவிட மிகக் கொடுமையாக உள்ளது. இந்த நிலையில், தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும், பிற தமிழின நலக்கட்சிகளும், தமிழர்களுக்கு நேர்ந்து வரும் இவ் வகப்புறக் கொடுமைகளை வாணிகமாக்கி. ஊதியங்கள் பெற்று வருகின்றனவே தவிர, நிலையான தீர்வுக்கு அவை இணைந்து நிற்பதாய்த் தெரியவில்லை; செயல் படவும் அணியமாயில்லை. தமிழினத்தின் ஒட்டு மொத்தமான இக்கொடுமைகளுக்ெல்லாம் ஒரு நிலையான விடிவு ஏற்பட வேண்டுமானால், தமிழ்நாட்டில் தனித்தமிழரசு அமைவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று உறுதியாக நம்புகிறோம். அந்த நிலைக்கான போராட்டத்தை நாம் விரைவிலேயே தொடங்க வேண்டும். அஃது எப்பொழுது? காலம் உணர்த்துமாக!

இந்திய முதலாளிகள்!

0 இந்தியப் பெரு முதலாளிகள் தம் பல்வேறு வாணிக அமைப்புகளில் ஈடுபடுத்தியுள்ள முதல் உரு 148 கோடி.

0 அவர்களுடைய சொத்து மதிப்பு உரு 27, 600 கோடி.

0 மேலும் அவர்கள் நடத்துகின்ற 110 பெருந்தொழில்களின் பங்குத் தொகைகளில் 25% முதல் 60% வரை அரசின் தொழிலுதவி நிறுவனங்களுக்குச் சொந்தமானவை.

0 இவ்வாறிருந்தும் இத்தகைய பெரிய முதலாளிகளின் தொழிற்சாலைகளில் பொருள் கட்டுப்பாட்டையோ, ஆளுமைக் கட்டுப் பாட்டையோ ஏற்படுத்த அரசால் முடியவில்லை.

0 எனவே. ஆண்டு இறுதியில் தொழிற்சாலைகளில் வரும் ஊதியங்களையெல்லாம் அந்த முதலாளிகளே எடுத்துக் கொள்ளுகின்றனர். அரசு அவற்றைப் பகிர்ந்து கொள்வதில்லை.

'தென்மழை' செப்: 83

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்னும் முயற்சியோ, அதுபற்றிய கோரிக்கையோ தவறானது; கொடுமையானது. இந்தப் போக்கை எதிர்க்கட்சிகள் உடனே கைவிட வேண்டும்.

பொறுத்துக் கொள்ள முடியாத ஆளுங்கட்சியின் போக்குகளை, மக்களாட்சி முறையில், கருத்தாலும் கண்டனத்தாலுமே முறியடிக்க முயற்சி செய்ய வேண்டும். எதிர்க்கட்சிகள் கூறும் இத்தகைய கருத்துகளுக்கு ஆளுங்கட்சியும் செவிசாய்த்து, நல்ல மதிப்பளிக்க வேண்டும். காவல் துறையையும், அறமன்றங்களையும் துணையாகக் கொண்டு எதிர்க்கட்சிகளின் கருத்துகளையும், குற்றச் சாட்டுகளையும் முறியடிப்பதும், புறக்கணிப்பதும் நல்ல கடைப்பிடி யன்று.

இக்கால் சட்ட மன்றங்கள் மாநிலங்களில் எங்கும் அமைதியாகச் செயல்பட முடியாத ஒரு சூழ்நிலை உருவாகி வருவது அரசியல் எதிர்காலத்திற்கு நன்றன்று. சட்ட மன்றங்களும், அறமன்றங்களும் மக்கள் மதிப்புக்குரியனவாக இப்பொழுது இல்லை. மக்கள் மதிப்பை அவை இழந்து வருகின்றன. இவையிரண்டுக்கும் துணையாக இருக்க வேண்டிய காவல்துறையும், கொலையாளியின் கையில் உள்ள கட்டாரியைப் போல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது கொடுமையான எதிர்காலத்தையே உருவாக்குவதாகும். நாட்டில் உள்ள மக்கள் ஓர் இருண்ட சூழ்நிலைக்கே தள்ளப்பட்டு வருகிறார்கள். இந்நிலை பெரிதும் கவலையளிப்பதாக உள்ளது.

உன்பகைக்கே செருப்பாய் உழைக்கின்றான்!

தமிழீழப் போராட்ட அணிகளில் மேலும் ஒரு புதிய அமைப்பு

தாங்குமா தமிழீழம்.... ?

தமிழீழத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் பல இளைஞர் இயக்கங்கள் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு :

1. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம். (LTTE) — பிரபாகரன் தலைமையில் இயங்குவது.

2. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) — உமாமகேசுவரன் என்ற முகுந்தன் தலைமையில் இயங்குவது.

— இவை இரண்டு இயக்கங்களே முதன்மையான இயக்கங்கள் இவற்றிற்கு எல்லா நாடுகளிலும் ஆதரவு உண்டு. கிளைகளும் உண்டு. இவை தவிர மேலும் உள்ள இயக்கங்கள வருமாறு.

3. தமிழீழ விடுதலை முன்னணி (TLF) — சிறிசபாரத்தினம், இராசப்பிள்ளை தலைமை தாங்குவது.

4. ஈழ மாணவர் பொது மன்றம் (GUES) — தமிழீழ மாணவர்கள் ஒன்றிணைந்தது.

5. ஈழ ஆய்வாளர் அமைப்பு (EROS) — இங்கிலாந்தில். உள்ள இரத்தினசபாபதியைத் தலைமையாகக் கொண்டு இயங்குவது.

6. தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) தங்கத்துரை, குட்டிமணி, சகன் இயக்கம். இப்பொழுது காசிப்பிள்ளை, சிரி ஆகியோரைத் தலைமையாகக் கொண்டு இயங்குவது.

7. — தேவன் என்கிற மாறனைத் தலைமையாகக் கொண்ட அமைப்பு ஒன்று

8. தமிழீழ விடுதலைப்பேரவை (T.E.L.C) — பிரான்சைத் தலைமையகமாகக் கொண்டு, முத்துக்குமரு தலைவராகவும், பாலசுப்பிரமணியத்தைத் துணைத் தலைவராகவும், சுரேந்திரனைச் செயலராகவும் கொண்டு இயங்குவது.

9. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (பிரான்சு) (T.C.O.C) பிரான்சில் உள்ள ஓர் இயக்கம். (முருகன், உலகேசன், ஆகியோர் தொடர்பு கொண்டது)

10. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (இலண்டன்.) இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்குவது. திரு. வைகுந்தவாசன் தலைமையில் அமைக்கப்பட்டது. இக்கால் அமிர்தலிங்கத்தின் முதல் மகன் காண்டீபன் பொறுப்பாக உள்ளார்.

11. தமிழீழ விடுதலை அணி (TELF) — மருத்துவர் (Dr.) தர்மலிங்கத்தைத் தலைவராகவும், ஈழவேந்தனை அமைப்புச் செயலாளராகவும், கோவை மகேசனைப் பொதுச் செயலாளராகவும் கொண்டு இயங்குவது.

12. தாயகம் திரும்பிய ஈழ மாணவர் இளைஞர் மன்றம் (U.R.E S) — தமிழகத்தில் உள்ள ஈழ மாணவர்களின் அமைப்பு.

13. ஈழ மக்கள் விடுதலைப்புரட்சி முன்னணி (EPRLF) — தங்கத்துரை, குட்டிமணி அமைப்பிலிருந்து பிரிந்து இயங்குபவர்கள் இயக்கம், இது நான்கைந்து இயக்கங்கள் ஒன்றிணைந்த அமைப்பு.

14. தமிழீழ ஒன்றிய விடுதலை முன்னணி(TULF) — தமிழீழத்திலுள்ள அரசியல் இயக்கம். சிவசிதம்பரம் தலைவராகவும் அமிர்தலிங்கத்தைப் பொதுச் செயலாளராகவும் கொண்டு இயங்கும் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சி இயக்கம்.

15: தமிழீழ் விடுதலை அமைப்பு (TELC) இது அமெரிக்காவில், நியூயார்க்கில் உள்ள நிறுவனம். பஞ்சாட்சரம், எட்வர்டு பெனடிக்டு, சிரிதரன், சிறிகாந்து முதலியோரைக் கொண்டு இயங்குவது. முதல் உலகத் தமிழீழ விடுதலை மாநாட்டை நடத்தியது.

16. ஈழ இளைஞர் மன்றம் (EYE) தமிழகத்தில் இருந்து செயல்படுவது.

17. ஈழ மகளிர் விடுதலை முன்னணி (EWLF) இது தமிழீழத்தில இருநது செயல்படுவது. இம் மகளிரணிக்குத் தலைவராக இருப்பவர் திருவாட்டி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்.

18. தமிழீழ இளைஞர் விடுதலை முன்னணி (TYLF) இதுவும் தமிழீழத்தில் இருந்து செயல்படுவது. இதற்கு மானவ சேனாதிராசா தலைவர்.

19. ஈழ மக்கள் விடுதலை முன்னணி (EPLF) இந்த இயக்கம் தனித்திருந்தாலும் ஈழ மக்கள் விடுதலைப் புரட்சி முன்னணியுடன் இணைந்து இயங்குகிறது.

— இவையன்றி இன்னும் ஓரிரண்டு சிறு சிறு இயககங்களும் ஆங்காங்குச் செயல்பட்டுவருகின்றன. தனித்து இயங்கும் சிலரும் உண்டு. இவை எல்லாமும் ஈழத்தமிழர் இயக்கங்களே! இவை எல்லாமும் தமிழீழ விடுதலை பெறவேண்டும் என்னும் குறிக்கோள் உடையவையே!

— இவை தவிர இப்பொழுது தமிழீழத்தில் ஒரு புது இயககமும் தொடங்கப் பெற்றுள்ளதாகச் செய்தி வந்திருக்கிறது. அந்த இயக்கத்துடன் ஏறத்தாழ 20 இயக்கங்கள் விடுதலைக்குப் பாடுபட்டு வருவதாகத் தெரிகிறது, புது இயக்கம் வருமாறு.

20. தமிழ் ஈழப் படை (T.E.A)

அண்மையில் தமிழீழத்தின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தீவிர இளைஞர்கள் நிறுவியுள்ளனர் இதற்கு தம்பாபிள்ளை மகேசுவரன் என்பவர் தலைவராவார்.

— முழுக்க முழுக்கத் தமிழீழ இளைஞர்களையும் விடுதலை நாட்டமுடையவர்களையும் கொண்டு இயங்கும் இவ் விடுதலை இயக்கங்கள் தவிர, தமிழகத்திலும் இங்குள்ள தமிழீழ ஆதரவாளர்களால் சில இயக்கங்கள் இயங்கி வருகின்றனி.

அவை இலங்கை குடிபெயர்ந்தோர் நல உரிமைச் சங்கம், தமிழக ஈழ நட்புறவுக் கழகம், தமிழீழத் தோழமைக் கழகம், இந்திய-தோழமைக் கழகம் இலங்கைத் தமிழர் நல மன்றம், முற்போக்கு இளைஞர் அணி, ஈழத்தமிழர் நல்வாழ்வு குழு முதலியன.

இவற்றைக் கொண்டு ஓர் உண்மை தெரிய வருகிறது. தமிழர்களுக்கு எத்தனைத் தாழ்ச்சிகள் உள்ளனவோ, அத்தனை இயக்கங்கள் தோன்றி உள்ளன. அஃதாவது தமிழர்களுள் ஒருவர்க்கு ஒருவர் கட்டுப்பட்டு இயங்க விரும்பவில்லை என்றும், அவரவர் தலைவராக இருந்து இயங்கவே விரும்புகின்றனர் என்றும் தெரிகிறது. இத்தனை விரிசல்கள் உலக இனங்களுள் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. என்ன செய்வது? தமிழினத்தின் மெலிவே இதுதானே?

— மின்னல்

நாட்டில் தேங்கியுள்ள வழக்குகள்!

வழக்கு மன்றங்கள் இந்தியாவில் மிகவும் மெத்தனமாகவே செயல்பட்டு வருகின்றன,

நாட்டில் உள்ள உயர்அற மன்றங்களில் (High Courts) முடிவடையாமல் தேங்கியுள்ள வழக்குகளின் எண்ணிக்கையைப் பார்த்தாலே இது விளங்கும்.

நாட்டிலுள்ள இன்றைய நிலைமை வருமாறு:

மாநில உயர்மன்றங்கள்	தேங்கியுள்ள வழக்குகள்
1) அலகாபாது	1,73, 586
2) கருநாடகம்	1,21,812
3) கல்கத்தா	1,03,427
4) சென்னை	92,177
5) பம்பாய்	83,331

இத்துடன் இந்தியாவில் உள்ள உயர் அறமன்ற நடுவர்களின் எண்ணிக்கை 79 இன்னும் நிறைவு செய்யப்படாமலே உள்ளன என்று நடுவணரசு சட்ட அமைச்சர் செகநாத கௌசல் தெரிவித்துள்ளார்.

தமிழில் படித்தவர்களுக்கு முன்னுரிமை என்பதை, மலையாளிகள் அமைப்பு எதிர்க்கிறது!

உயர்அற மன்றத்தில் வழக்கு!

காவல் துறை ஆய்வாளர்களாக அமர்த்தப்பட வேண்டியவர்களுக்காகக் காவல்துறை அதிகாரி கடந்த சனவரி மாதம் செய்தித்தாள்களில் ஒரு விளம்பரம் கொடுத்திருந்தார். அதில் அவ்வேலைக்கு வருபவர்களின் தகுதி நிலைகளைக் குறிக்கும்பொழுது, அவர்கள் குறைந்த தகுதியாகப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்றும், அதிலும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், இவ்வகையில் போதிய ஆள்கள் கிடைக்கவில்லையானால் தான், ஆங்கிலத்தில் பயின்றவர்களின் வேண்டுகைகள் (விண்ணப்பங்கள்) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், நடைமுறைகளை விளக்கியிருந்தார்.

இந்தக் கடைப்பிடிப்பு முறையை எதிர்த்துத் தான், கன்னியாகுமரியில் உள்ள மலையாள சமாசத்தின் தலைவர் சென்னை உயர்அற மன்றத்தில் வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். அவ்வழக்கு முறையீட்டில் அவர் கூறியிருப்பதாவது:

1956-ஆம் ஆண்டு மொழிவழி மாநிலம் அமைக்கப்படடபொழுது, கேரளாவைச் சேர்ந்த கன்னியாகுமரி, வளவன்கோடு, கல்குள்ம், தேவாளை ஆகிய நான்கு வட்டங்கள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டன.

அக்கால் அப்பகுதிகளில் வாழ்ந்து வந்த மலையாளம் பேசும் சிறுபான்மை மக்களுக்கு, அவர்களின் தாய்மொழி தமிழில்லை என்பதற்காக, கல்வி, அரசுப் பணிகள் முதலிய எந்த வாய்ப்பும் மறுக்கப்படமாட்டாது; மற்றவர்களுடன் சம வாய்ப்பு அளிக்கப்படும் என்று சட்டமுழுமையான உறுதிமொழி அளிக்கப்பட்டது. மேற்சொன்ன பகுதிகளில் உள்ள மலையாளம் பேசும் மக்கள் ஆங்கிலப் பயிற்று மொழியில் பட்டம் பெற்றவர்கள். இத்தகையவர்களுக்கு, இக்கால் உள்ள காவல்துறை ஆய்வாளர் பணிக்கான அறிவிப்பு, பணி வாய்ப்பை இழக்கச் செய்கிறது. ஆகவே இந்தக் கட்டுப்பாட்டைச் செல்லாது என்று அறிவிக்க வேண்டுமென்று உயர் நெறி மன்றத்தைக் கேட்டுள்ளார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன் கூறிய ஓர் உறுதிமொழி அந்தக் காலகட்டததில் பயின்ற ஒரு சிலர்க்குத்தான் பொருந்தமுடியும். இந்த ஒரு சிலர்க்காக, தமிழ்மொழி வழங்கும் மாநிலத்தில், அதைத் தாய்மொழியாகக் கொண்டு படித்த, படித்துக்கொண்டிருக்கும், படிக்கப்போகும் அத்தனைத் தமிழர்களுக்கும், நிகழ்காலத்திலும் எதிர்கர்லத்திலும் உள்ள மாநில உரிமையைத் தடுத்து நிறுத்த முயல்வதும், அதனால் பல மாநில மக்களின் உரிமை நலச் சிக்கலை உருவாக்குவதும் அறிவுடைமையாகாது. மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்டதே அந்தந்த மொழியினர்க்கு குறைந்த பக்கம் அந்தந்த மொழி மாநிலத்திலாவது வாழ்க்கை வாய்ப்புகள் கிடைக்கட்டும் என்பதற்காகததான், மேலும் கால வரையறையின்றி ஆங்கிலவழிக் கல்விககு முன்னுரிமை தந்து கொண்டிருந்தால், தமிழ்ப் பயிற்று மொழியாளர்க்கு வாய்ப்பும், தமிழ் ஆட்சிமொழித் தகுதியும எப்படிப் பெற முடியும்?

இதைத் தமிழகத்தில் வாழும் பிற தாய்மொழி வழியினர் கருத்தில் கொண்டு தமிழில் பயின்று கொள்வதே வாழ்வு அமைதிக்கும் அறிவுக்கும் பொருந்துவதாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

— மின்னல்

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனியிதழ் :	1·25 ,,	3 ,,	3 ,,
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	18 ,,

தமிழ் நலத்தைப் பேணுதை தலைவர் தம்மைத்

நாட்டில் நடக்கும் நயவஞ்சகங்கள்!

0 திருவள்ளுவர் உலக அறிஞரல்லரா?

0 திருக்குறள் உலகநூல் ஆகாதா?

0 என்னே கொடுமை? என்னே கொடுமை?

0 இரண்டகர்களின் நயன்மையற்ற செயல்!

0 திருவள்ளுவத்திற்கு நேர்ந்த இழுக்கு!

(சாதிப் பெயரையே தம் பெயராக வைத்துக் கொண்ட சாதிப் பித்தர்களுள் திரு. ஏ.கே.செட்டியார் என்ஒருவர். அவரைக் கொண்டு, சென்ற ஆண்டு தி.வி.எசு. (T.V.S) நிறுவனம், அறிஞர்களின் கருத்துகளைத் தொகுத்து ஒரு நூலை வெளியிட்டுள்ளது. மொத்தம் 866 பக்கங்கள் கொண்ட அந்நூலில் திருவள்ளுவர் கூறிய கருத்து ஒன்றுகூட இடம் பெறவில்லை.

அந்நூல் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளி நூலகங்களிலும் உள்ளது! திருவள்ளுவத்துக்கு இடமளியா அந்த நூல் பள்ளிகளிலன்று, தமிழகத்திலேயே இருத்தல் கூடாது. அவ்வாறு இருத்தல் தமிழினத்திற்கே மானக் கேடு. அந்நூலாசிரியர் ஆகிய, இனைப்போன்று இனமல்லாத ஏ. கே. செட்டியாரை நாம் மிக மிகக் கடுமையாகக் கண்டிக்கிறோம்! செய்தியின் முழு விளக்கத்தையும் கீழே காண்க!

திருக்குறள் தொடர்பான கழகங்களும் அமைப்புகளும் இதற்குக் கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவிப்பதுடன், கல்வியமைச்சருக்கும், தமிழக முதலமைச்சருக்கும் இச்செய்தியை மடல்வழித் தெரிவித்துத் தக்க தீர்வு செய்யக் கேட்டுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.)

பெரும் மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம் பல!

ஐயா! சென்ற ஆண்டில் (தி.பி.2014)டி.வி.எசு, என்னும் பார்ப்பனக் குழுமம் ஏ. கே. செட்டியார் என்பவரைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு 'கொய்த மலர்கள்' என்ற, 866 பக்கங்களையும். 3600 மலர்கள், என்ற சிறுசிறு கருத்துத் தொகுப்புகளை, 1வழிபாடு, 2.மதம், 3.மனிதன், 4. மனம், 5.கல்வி 6.வாழ்க்கை, 7.பேச்சு, 8.குணங்கள், 9.குறைகள், 10.தீமை, 11.அறம்(தர்மம்) 12.நீதி, 13.அழகு என்ற தலைப்புகள் கொண்ட ஒரு பெரிய நூலை வெளியிட்டு, அதை அனைத்துப் பள்ளிகளுக்கும், (மேல்நிலை) விலையின்றிக் கொடுத்துள்ளது.

அந்நூலில், வரலாற்றுக் காலம் தொடங்கி இன்றுவரை, அஃதாவது, சாக்கரடீசு முதல் சாக்ளா வரை, உலகில் உள்ள அனைத்துப் பெரியார்களின் கருத்துகளை யெல்லாம் தொகுத்து ஒவ்வொரு தொகுப்பும் ஒவ்வொரு மலராக 3600 மலர்கள் அந்நூலில் இடம் பெற்றுள்ளன. மனு, சுக்கிரநீதி, பாகவதம் போன்ற நூல்களின் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன. நான் அவை அனைத்தையும் புரட்டிப் பார்த்தேன். எந்த ஒரு பக்கத்திலும்கூட, திருக்குறளின் கருத்தோ அல்லது வள்ளுவர் கூறிய கருத்தொன்றோ எங்கும் எவ்விடத்தும் காணப்படவில்லை. திருவள்ளுவர் உலகப் பெரியார்களில் ஒருவராக மதிக்கும் தகுதிப்பாடு அற்றவரா? திருக்குறள் உலக நூல்களோடு ஒப்பவைத்து எண்ண, மதிப்பிட, ஆய, அருகதை அற்றதா? ஓர் இனத்திற்கு ஒரு நெறி கூறும் நூல்களை யெல்லாம் விடத் தரக்குறைவான நூலா? திருவள்ளுவர் கருத்துகள், இராமகிருட்டிணர், விவேகானந்தர் போன்ற பெரியவர்களின் கருத்துகளின் அளவிற்கும்கூட இல்லாமல் போய்விட்டனவா? விவேகசிந்தாமணியை விடக்கூட திருவள்ளுவர் தாழ்த்தப்பட்டவராகி விட்டாரா?

பார்ப்பனியம், எந்த அளவிற்குத் திட்டமிட்டுக் குறள்மீதும் குறட்கருத்துகள் மீதும், காழ்ப்புணர்வு கொண்டுள்ளது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் பன்னெடுங் காலமாக இருந்தாலும், தற்காலத்திற்கு இஃது ஒரு பெரிய சான்றாகும். அது மட்டுமல்லாது இன்னோர் உண்மையும் புலப்படுகிறது. பார்ப்பனியம் தனது கரவுத்தனமான செயல்களைப் பரப்ப தமிழினத்தைச் சார்ந்தவரையே கருவியாகப் பயன்படுத்துவது, அது கையாண்டு வரும் முறைகளில் மிக முகாமையானது. அஃது இன்றும் வெற்றியாக நடை பெறுகிறது. அதற்கு நம்மவர் இன்றும் துணைபோகின்றனர் என்பதற்கு இது சான்றாகும்.

ஏ.கே. செட்டியார் என்பவர் திருக்குறளை அறியாமல் இருக்க முடியாது. இருந்தும், உலக அறிஞர்களில் பெரும் பாலோரின் பெயர்கள் இடம் பெறுகையில், உலகப் பெரியோர்களுக் கெல்லாம் பெரியாராய் விளங்குகின்ற திருவள்ளுவர் பற்றியும் அதில் இடம் பெற வேண்டும் என்ற உணர்வு ஏன் அவர்க்கு வரவில்லை? நம் மொழி அறிஞர் என்பதாலா, நம் முன்னோர் என்பதாலா அவர்க்குப் பெருமை? தம்மையே உலகிற்குத்தந்து வான்புகழ் கொண்டவர் அல்லரா அவர்? அவர் இடம் பெறக் கூடாது என்று ஏதாவது அல்லது யாரிடமாவது உறுதி கூறிவிட்டாரா? நூலைத் தொகுத்தவர்க்கு அப்படிச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது?

தமிழர்களே! தன்மானம் இழந்த தமிழர்களே!! வயிற்றுப்பாட்டையே முகாமையான பாடாக-குறிக்கோளாகக்கொண்ட தமிழர்களே! சிந்திப்பீர்! பார்ப்பனரால்தொகுக்கப்படும்ஒருநூலில் அவர்களது முகாமையான நூற் கருத்துகள் இவ்வாறு புறக்கணிக்கப்படுமா? ஆனால், நம் நிலை? இந்நிலை மாறுவதெப்போது? மாற்றுவதெப்போது? இப்போதே நாம் உறுதி கொள்ள வேண்டாமா? எண்ணிப்பார்ப்பீர்.

அன்பன்
புலவர் அறிவுடை நம்பி. மூலனூர்.

உரிமை இந்தியாவா?

0 30-ஆம் ஆண்டுகளில் ஏழைநாடுகளைக் - குடியிருப்பு நாடுகளைத் தனது கண்காணிப்பின் கீழ் வைப்பதற்கு இங்கிலாந்து ஏற்படுத்திய திட்டம் தான் காமன்வெல்த்.

0 அரசியல், பொருளியல் அடிப்படையில் வளரும் நாடுகளை ஒடுக்கும் திட்டம் அது. (அதற்கு) 45 நாட்டுடைமையாளர்கள் மாநாட்டுக்கு வந்தார்கள்.

0 இங்கிலாந்து அரசி வரும் வானூர்தி 'ராகு' காலத்தில் இறங்கலாகாதென்று 12-05க்குக் கீழே இறக்கப்பட்டது.

0 ஒரு தலைவர்க்கு இரண்டு வெளிநாட்டு (மெர்சிடீசு) மகிழுந்துகள்; தங்கலுக்கு பசுமைகொழிக்கும் கோவாவில் ஏந்து செய்து கொடுத்தனர். (நவ.25-28) மூன்றுநாள் செலவு 44 கோடி. (மணிக்கு 62 இலக்கம்)

0 நாம் பெற்றது குடியரசுரிமையே (சுதந்திரமே) அன்று என்பதற்குச் சான்றாக ஐதராபாத்தில் அரசியைப் பல்லக்கில் ஏற்றிச் சுமக்கப்பட்டது.

0 சார்லசு. சென்னை வந்தபோது தமிழக அதிகாரிகள் குனிந்து அரண்மனை வழக்கப்படி வணங்கினார்கள் (பழைய செய்தி).

0 இங்கு அரசு, அதிகாரம், காவல்துறை, படைத்துறை அனைத்திலும் ஆங்கிலேய அதிகார முறைகளே! வழங்கப்படுகின்றன.

0 ஆகஃச்டு 15-ஆம் நாளை ஆவணி அவிட்டம் போல் கொடி மாற்றும் நாளாக அறிவித்து விடலாமே உரிமை (சுதந்திரம்) என்ற பெயரெதற்கு?

ஆனந்த சுதந்திர மடைந்து விட்டோமென்று ஆடலாமா? பல்லைக் காட்டலாமா?

செய்தி: க.சிவமணி, பழனி
அடிப்படை:-"புதிய கலாச்சாரம்"
திச: 83. பக்: 19

இலங்கைத் தமிழ் ஏதிலியர்களுக்கு இதுவரை இந்தியா உதவியுள்ள தொகை 35 கோடி!

இலங்கையில் சென்ற ஆண்டு (1983) சூலை மாதம் நடைபெற்ற இனக் கலவரங்களில் தாககப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இந்திய அரசுச் சார்பில் உரு 35 கோடி வழங்கப்பட்டுள்ளதாக இங்குள்ள இந்திய உயர் ஆணையர் (Indian High Commissioner) எசு. சே. எசு. சாட்வால் தெரிவித்துள்ளார்.

அவ்வுதவிகளுள் உணவுப் பண்டங்கள், துணிகள், மருந்துகள், வீட்டுப் பயன்படு பொருள்கள் முதலியவையும் அடங்கும். தொகையாக உதவிய முதல் நாடு இந்தியாவே என்றார் அவர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் இன்னும் 23 ஏதிலியர் தங்குமனைகள் உள்ளன என்றும், அவற்றில் 2250 குடும்பங்கள் (ஏறத்தாழ 12000 பேர்) தங்கியுள்ளன எனவும் கூறினார்.

---

* தொடர்வண்டிக் கட்டணத்தை அதிகப்படுத்துவதில் பொருளில்லை!
* அத்துறையில் ஏற்பட்டு வரும் ஆரவார, தேவையற்ற, வீண் செலவுகளைக் குறைத்தாலே போதும்!
* திறமையற்ற ஆளுமை, தேவையற்ற ஊதாரித்தனமான செலவுகள்-இவை தொடர்வண்டித் துறையில் மிகுந்துவிட்டன.
* இவற்றால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய, கட்டணத்தை உயர்த்த வேண்டுவதில்லை!

தொடர்வண்டித் துறை அமைச்சகத்திற்கு, அத்துறையின் சீர்திருத்தக்குழு

அறிவுரையும் எச்சரிக்கையும்!

தொடர் வண்டித் துறை மக்கள் போக்கு வரத்துக் கட்டணத்தை அண்மையில் உயர்த்தியுள்ளது அனைவர்க்கும் தெரியும். அதேபோல் சரக்குக் கட்டணமும் உயர்ந்துள்ளது. இவ்வுயர்த்தம் தேவையற்றதும் பயனற்றதும், எதிர்பார்த்த நன்மைக்கு மாறாகத் தீமை விளைவிப்பதும் ஆகும், என்று தொடர்வண்டித் துறையின் உயர்மட்டச் சீர்திருத்தக் குழு அரசுத்துறையை எச்சரித்து அறிவுரை கூறியுள்ளது.

அது தொடர்வண்டித் துறை அமைச்சகத்துக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கீழ்வருமாறு கூறியுள்ளது.

தொடர்வண்டித் துறையில் ஆளுமைத்திறன் குறைந்துள்ளது. தேவையற்ற ஊதாரித்தனமான ஆரவாரமான ஆளுமைச் செலவுகள் மிகுந்துள்ளன. இச் செலவுகள் 1981-82 ஆம் ஆண்டில் உருபா 3225 கோடியாக இருந்தது. ஆனால் கடந்த 82-83 ஆம்ஆண்டில் இஃது உருபா 4582 கோடியாக மிகவும் உயர்ந்துள்ளது என்று சுட்டிக் காட்டி, இந்நிலைக்குக் குழு தன் கவலையைத் தெரிவித்துள்ளது.

இவ் வீண்செலவுகளைக் குறைக்கவும், தொடர்ந்து வரும் ஆளுமைத் (நிருவாக) திறமையை மேலுயர்த்தவும், உடனடியாகத் தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறின்றி ஏற்படும் செலவுகளுக் கெல்லாம் தகுந்தபடி வருமானத்தைத் திரட்டுவதற்காகப் பொதுமக்களின்மேல் கட்டணச் சுமையை ஏற்படுத்துவதும், சரக்குகள் கட்டணத்தை உயர்த்துவதும் சரியாகாது. நயன்மையாக. உண்மையாகப் போக்குவரத்துக்கு இது தொடர்பாக என்ன செலவாகிறதோ, அதையே பொது மக்களிடமிருந்து கட்டணமாகப் பெறவேண்டும். தேவையற்ற செலவுகளைச் செய்துவிட்டு, அவற்றை ஈடுகட்டுவதற்காகப் பொதுமக்களுக்குச் சுமைகளை ஏற்றக் கூடாது என்றும் குழு அமைச்சகத்தைக் கண்டித்துள்ளது.

தொடர்வண்டி வழியாக அனுப்பப்படும் சரக்குகளுக்கும், அதில் பயணம் செய்யும் மக்களுக்கும் கட்டணங்களை உயர்த்துவதன் வழியாக வருமானம் திரட்டுவது, ஒரு கட்டத்திற்கு மேல் போகுமானால். நேர் எதிரான விளைவே ஏற்பட்டு, ஏற்கனவே வந்து கொண்டுள்ள வருமானமும் குறையலாம் என்றும் சீர்திருத்தக்குழு அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

ஆனால் பொதுமக்களின் அவலக் குரலையே பொருட்படுத்தாத நாட்டையாளுகின்ற அமைச்சர்களும் அதிகாரிகளும், இக்குழுவின் குரலையா காதில் போட்டுக் கொள்ளப் போகின்றனர். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்கே போய்ச் சொல்லுவது இந்தக் கொடுமையை—?

டாட்டாவும், பிர்லாவும் பணக்காரன்!

நாளைக்கு 2 உருபா உள்ளவனும் பணக்காரன்! இத்தகைய கணக்குப் போட்டவர்களை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்!

இந்தக் கொடுமைக்கு ஓர் எல்லை வேண்டாமா? மக்களே! சிந்தியுங்கள்!

— எரியீட்டி

தமிழ் நிலத்துப் புறக்கணிக்க!

தீயிட்டுக் கொளுத்தப்பட வேண்டிய இதழ்களுள் குமுதமும் ஒன்று!

- தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு மனநோயைப் பரப்பிவருகிறது அவ்விதழ்!
- அன்பர் ஒருவரின் நெஞ்சங் குமுறும் மடலும் அதற்கான விடையும்!

(மடலும்; பின் குறிப்பும்)

உதவி ஆசிரியர் குறிப்பு :

அன்பரின் மனக்கொதிப்பை நன்கு அறிந்தோம். பல ஆண்டுகளுக்கு முன்னரே பாவலரேறு அவர்கள் 'ஓ! ஓ! குமுதமே! தமிழ் தின்னும் கழுதையே!' என்று எடை போட்டுள்ளார்கள். அது தமிழைத் தின்பதுடன் தமிழனையும் தின்கிறது. இதில வியப்பு ஒன்றுமில்லை.

தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு ஆழமான கொடிய மனநோயைப் பரப்பி வருகிறது அவ்விதழ்! எனவே, தீயிட்டுக் கொளுத்தப்பட வேண்டிய இதழ்களுள் குமுதமும் ஒன்று என்பதைத் தாங்கள் அறிதல் வேண்டும்!

நச்சுத்தன்மையைத் தமிழன் பரப்பினால் என்ன? அல்லது அவ்விதழ் தமிழனால் நடத்தப்பட்டாலும் பார்ப்பனரால் ஆளுமை செய்யப்பெறுகிறது என்பதைத் தாங்கள் உணரவேண்டும்.

இன்னொன்று மேலோட்டமானவர்களை அவர்களால் தங்கள் இனத்துக்கு ஏதும் கேடில்லை என்பவர்களை மட்டுந்தாம்—பார்ப்பனர்கள் அறிமுகப் படுத்துவார்கள். எவருடைய வளர்ச்சி, பார்ப்பனீயத்திற்கும், பார்ப்பனர்க்கும் கேடு பயக்குமோ அவர்களை என்றுமே 'குமுத'க் கூட்டத்தார் விளம்பரப்படுத்த மாட்டார்கள். அஃது அவ்வினத்தவர்களின் இயற்கை!

ஆனால் நம்மவர்களுள் சிலரும் — அவர்கள் நடத்தும் இதழ்களில் பாவலரேறு போன்றவர்களை இருட்டடிப்புச் செய்கின்றனரே, அஃது ஏன் தெரியுமா? அவர் போன்றவர்கள் வளர்ந்தால், தங்களின் ஏமாற்றும் எத்தும் மக்களால், கண்டு கொள்ளப்படும் என்பதால் இருக்கலாம்! இந்தக் கொடுமையை எங்குபோய்ச் சொல்வது?

— எரியீட்டி

'குமுதம்' கிழமை ஏட்டின் இருட்டடிப்பு!

கடந்த இரண்டு கிழமைகள் 'குமுதம்' ஏட்டில் தமிழ்நாட்டு அரசியல் கட்சித்தலைவர்களின் புகைப் படங்களும், அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளின் பெயர்களும் வெளிவந்துள்ளன. கடைசியாக வெளியிடப்பட்ட 'விடுபட்டுப்போன தலைவர்கள்' பட்டியலிலும்கூட பாவலரேறு ஐயா அவர்களின் புகைப் படம் வெளியிடப்படவில்லை.

இது குறித்து அவ் வேட்டிற்குக் கடந்த கிழமை மடல் விடுத்தேன். 'உ.த.மு.க.வின் அதிகாரப் பூர்வ ஏடாகத் 'தமிழ்நிலம்' கிழமைதோறும் வெளி வருகிறது. இதழ் நடத்தாத (உறுப்பினர்கள் மட்டும் உள்ளனரோ?) அரசியல் கட்சிகளின் தலைவர்களை வெளியிட்ட தாங்கள், உ.த.மு.க. பற்றியும் அவ்வியக்கத்தின் தலைவர் (முதல்வர்) பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைப் பற்றியும் ஏன் வெளியிடவில்லை? எங்கோ தவறு நடந்துள்ளது!' என்று அம்மடலில் விளக்கியிருந்தேன். இதுகாறும் அவ்வேடு இது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

தமிழர் நடத்தும் ஏடுதான் குமுதம்!
தமிழ்—தமிழர்—தமிழ்நாடு, நலன்நாடும்
உ.த.மு.க பற்றியும், பாவலரேறு ஐயாவைப் பற்றியும் அவ்வேடு இரட்டிப்புச் செய்கிறதே ஏன்? இதுதான் தமிழரின் தனிக்குணமோ?

பின்குறிப்பு :

பெருந்தகை பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம் கூறித் துப்பாக்கி தி. அன்பழகன் தொடுக்கும் மடல்.

மேற்குறிப்பிட்ட செய்தியை நமது 'தமிழ்நிலம்' இதழில் வெளியிடவேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

கழகத்தின் மெத்தனம் குறித்த தங்களது அறிக்கை மனநிறைவையளித்தது. அரசியல் களத்திலே குதித்த பிறகும்கூட, வெற்று ஆர்ப்பாட்டம், போலித்தனமான விளம்பரம் இன்றித் திட்டமிட்டுச் செயலாற்றுவது மிகவும் மகிழ்வானதே.

சனவரி 25-ஆம்நாள் திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்ற முத்தமிழ் மன்றவிழாவில் பேசிய தி.மு.க செயலவரர் ஏ. வி. திருட்டிணணமூர்த்தி அவர்கள், அங்குத் தாங்கள் 3 நாட்களுக்கு முன்பு பேசிய கருத்துகளை அப்படியே குறிப்பிட்டார். அடிக்கடி தங்களின் பெயரையும் குறிப்பிட்டு மகிழ்ந்தார். உண்மையான திராவிட இயக்கத்தாரின் உள்ளத்தை ஐயா அவர்கள் எளிதில் பெறமுடியும் என்பதை அப்போது உணர்ந்தேன். உண்மையுள்ள,

— துப்பாக்கி. தி. அன்பழகன், திருச்சி-16.

தமிழ்நாட்டு அரசுத்துறைத் தட்டச்சர்கள் கட்டாயம் தமிழ்த்தட்டச்சுத் தெரிந்திருக்க வேண்டும் !

தமிழ் தெரியாத, ஆங்கிலத் தட்டச்சு மட்டும் தெரிந்த தட்டச்சர்கள் கட்டாய ஓய்வு பெறவேண்டும்!

தமிழை முழு ஆட்சிமொழியாக்கும் நடவடிக்கையில் தமிழகஅரசு கட்டளை!

1957-ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்கும் முயற்சியை மேற்கொண்டது. ஆனால் அதன் பின் இருபதாண்டுகள் அஃதாவது 1977 வரை அந்த முயற்சியில் ஒருசிறு அளவு முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், ஆட்சித் துறையில் இன்னும் ஆங்கிலம் நீடித்து வருவது மக்களை ஏமாற்றுவதாகும் என்றும், இந்நிலை ஆட்சித்துறையில் உள்ள அதிகாரிகள் சிலரின் போக்கால் ஏற்படுவது என்றும், அண்மையில் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் தெரிவித்துள்ளார்.

இவ் வகையில் ஒரு தீவிர நடைமுறையைச் செயலுக்குக் கொண்டுவரத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

அரசு அலுவலகங்களில் உள்ள சில முதுநிலை ஆங்கிலத் தட்டச்சாளர்கள் தமிழ்த் தட்டச்சு பயில்வதில் அக்கறை காட்டாமல் அதிலிருந்து விலக்குக் கோரியிருந்தனர். இதனால், தமிழ் மொழியை எல்லா மட்டங்களிலும் ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு இடையூறு ஏற்பட்டது.

இப்பொழுது இந்நிலையைச் சீர் செய்ய ஆங்கிலம் மட்டுமே பயிற்சி பெற்ற தட்டச்சாளர்களைத் தகுந்த இழப்பீடு கொடுத்துப் பணியிலிருந்து கட்டாய ஓய்வு பெறச்செய்யவும், அவ்விடங்களில் தமிழ்த் தட்டச்சுப் பயின்றவர்களைப் பணியில் அமர்த்தவும் தக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு முதலமைச்சர் கட்டளையிட்டுள்ளார் என்று தெரிகிறது.

ஏறத்தாழ 27 ஆண்டுகளுக்குப் பின்னாவது தமிழ் ஆட்சி பற்றிச் சிந்தித்தார்களே! இன்னும் இது செயலுக்கு வர எத்தனை ஆண்டுகளாகுமோ?

— எரியீட்டி

ஆண்டுக்கு 9 மாதங்கள் தமிழ்த் திரைப்படங்கள்!

தமிழக அரசின் முடிவை எதிர்த்துத் தில்லித் திரைப்பட முதலாளிகள் கண்டனம்!

தமிழ் நாட்டில் உள்ள திரைப்படக் கொட்டகைகளில் ஆண்டுக்கு 9 மாதங்கள் தமிழ்த்திரைப் படங்களே காட்ட வேண்டுமென்றும், பிற மூன்று மாதங்கள்தாம் ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி, முதலிய பிறமொழிப் படங்கள் காட்டப் படவேண்டும் என்றும், தமிழ்நாடு அரசு சென்ற மாதம் ஒரு கட்டளை பிறப்பித்துள்ளது.

அந்தக் கட்டளையை எதிர்த்தும் அதற்குக் கண்டனம் தெரிவித்தும், தில்லியில் உள்ள வடநாட்டுத் திரைப்பட முதலாளிகளை உறுப்பினர்களாகக் கொண்ட திரைப்பட உருவாக்குநர் கழகம் தமிழக முதல்வருக்கு ஒரு மடல் எழுதியுள்ளது.

அதில், 'அவ்வறிவிப்பு, திரைப்படங்கள் வழியாகக் கருத்துகளை வெளியிடும் உரிமையைப் பறிப்பதாக உள்ளது என்றும், அந்தக் கட்டளையை உடனடியாகத் திரும்பப் பெறாவிட்டால், தென்னிந்தியத் திரைப்பட உருவாக்குநர்கள் எடுக்கும் இந்திப் படங்களை மகாராட்டிரத்தில் (பம்பாயில்) திரையிட இசைவளிக்கமாட்டோம் என்றும், அந்தக் கட்டளையைத் தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்' என்னும் கோரிக்கையை முன்வைத்து அனைத்து இந்திய அளவில் ஒரு போராட்டம் நடத்தப் பெறும் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வடநாட்டு முதலாளிகள், தமிழ்ப் படங்களை மட்டும் அங்குத் திரையிடுவதில்லையே அஃது ஏன் என்று தமிழக அரசு திருப்பிக் கேட்க வேண்டும். தேசியம், ஒருமைப்பாடு என்றால் இருதரத்துக்கும் பொதுவானவையாகத்தானே இருக்க முடியும். நம் தமிழக அரசு இது போலும் நிலைகளிலாவது நம் உரிமையை விட்டுக் கொடுக்காமல் இருக்குமா? பார்க்கலாம்.

— அகிாடி

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

அந்நகரம் முழுவதும், நகரத்தைத் தாண்டி சில பகுதிகளுக்கும் செல்கின்றன. இவற்றை அமைப்பதற்கு மிகு பொருட்செலவும், அளவிறந்த முயற்சியும், மக்களின் மனவியல் அறிவியல் வளர்ச்சியும் வேண்டும். ஏனெனில் இங்குதான், நடைபாதையின் இடிபாடுகளுக்கிடையில் உள்ள கடைகளையோ, ஏதோ ஒரு நலங்கருதி திடீர் கோவில்களையோ அப்புறப்படுத்த முயன்றாலும், மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்களே! அரசில் கட்சிகளும் அவர்களுக்குத் துணை போகின்றனவே எந்த முன்னேற்றத்தைத் துணிந்து செய்வது? (தொடரும்)

தமிழீழத்தில் ஏதிலிகள் தங்கல்(முகாம்)களில் உள்ள தமிழர்கள் தொகை!

1983 சூலை, ஆகசுட் கலவரத்தைத் தொடர்ந்து ஏதிலிகளானோரில் இன்னும் 10,572 பேர் கொழும்பு ஏதிலிகள் தங்கல்களில் உள்ளனர். இவை தவிர வட, கிழக்கு மாநிலத் தங்கல்களிலும் குறிப்பிடத்தக்க அளவில் ஏதிலிகள் உள்ளனர். இவை பற்றிய விளத்தம் பின்வருமாறு.

பம்பலப்பிட்டி	— 3,969
கொட்டஞ்சேனை	— 1 664
இரத்மலானை இந்துக்கல்லூரி	— 2 279
இரத்மலானை வானூர்தி நிலையம்	— 2,245
நுவரெலியா	— 66
மட்டக்களப்பு	— 424
திருகோணமலை	— 5
அநுநாராதபுரம்	— 112
யாழ்ப்பாணம் (14 தங்கல்களில்)	— 5 268
வவுனியா (3 தங்கல்களில்)	— 984
முல்லைத்தீவு (5 தங்கல்களில்)	— 440
மன்னார்	— 165

இவை திசம்பர் 6-ஆம் பக்கல் புள்ளி விளத்தமாகும்!

— நன்றி. 'ஈழச்செய்தி' 18-1-84

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை - இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
  எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.